**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக) மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க.எண்.90 /ஒபக / 2019, நாள் : 19.02.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – வேலூார் மாவட்டம் – 2019–20 ஆம் கல்வியாண்டு – பள்ளிகளில் இளைஞர் மற்றும் சுறறுச்சூழல் சார் மன்றம் (Youth & Eco Club) ஏற்படுத்துதல் – தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3398/அ16/ஒபக/2019, நாள்.30.01.2020.

------

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கு இணங்க ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி 2019–20 ஆம் ஆண்டு வாயிலாக அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல்சார் மன்றம் (Youth & Eco Club) ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளின் வளர்ச்சியிலும் சமுதாய மேம்பாட்டிலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பது இன்றியமையாததாகிறது. மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் சூழல் அமைப்பு சார்ந்த கருத்துகளை கற்பித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தி தூய்மையான மற்றும் பசுமையான சூழலை மாணவர்கள் மூலமாக உருவாக்குவது இம்மன்றத்தின் நோக்கமாகும்.

Scanned by CamScanner

மேற்காண் இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல் சார் மன்றம் (Youth & Eco Club) அமைப்பது குறித்து கீழ்க்காணும் அறிவுரைகள் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

- Youth and Eco Clubs to be constituted in all schools.
- Youth Clubs to utilize idle school resources like
  - playgrounds and sports equipments
  - libraries, music and art rooms and
  - Auditorium for co-scholastic and recreation activities like drama, debate, art, sports and games, music etc. for individual and inter personal growth.
- Utilize playing fields and libraries after normal school hours and during holidays etc.
- Eco clubs to carry out activities to promote awareness and interest in environment, biodiversity, climate and local ecology, nutrition, health, sanitation and hygiene.
- They can utilize parents, retired govt. servants, retired teachers to coach children and spent time with them.
- The principal/Vice principal will be in-charge of the Youth & Eco Club. One teacher will be assigned as a co-ordinator on rotation basis, who would stay back after school hours to facilitate the youth club activities.
- Eco Clubs will carry out activities related to water conservations and creating awareness on various social crisis.

எனவே, அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல்சார் மன்றம் (Youth & Eco Club) அமைப்பது குறித்து கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

**இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல்சார் மன்றம் (Youth & Eco Club) அமைப்பு**

- அனைத்துத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல்சார் மன்றம் (Youth & Eco Club) அமைத்தல் வேண்டும்.

Scanned by CamScanner

- இம்மன்றத்தில் தொடக்கப் பள்ளிகளில் 3 முதல் 5 ஆம் வகுப்புகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளின் மாணவ / மாணவிகளுள் ஊக்கத்துடன் செயல்படக் கூடிய 5 மாணவ / மாணவிகள் கொண்ட குழு ஏற்படுத்த வேண்டும்.
- அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10 ஆம் வகுப்புகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்புகளின் மாணவ / மாணவிகளையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். இம்மன்றத்தில் மொத்தம் 15 பேர் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
- இம்மன்றத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு ஆர்வமுள்ள ஆசிரியர்களைத் தெரிவு செய்து சுழற்சி முறையில் ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்தல் வேண்டும்.

இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல்சார் மன்றம் செயல்பாடுகள்:

இம்மன்றம் இலக்கியப் பிரிவு , கலை கலாச்சாரப் பிரிவு மற்றும் விழிப்புணர்வு பிரச்சார பிரிவு என்ற 3 குழுக்களாகப் பிரிந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் தலைவர் மற்றும் செயலர்களைத் தேர்வு செய்ய வேண்டும். மூன்று பிரிவுகளின் செயல்பாடுகளாவன:

1. இலக்கியப் பிரிவு

பள்ளிகளில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளை நடத்துதல் வேண்டும்.

- மொழி மன்றங்களை (Language Club) உருவாக்கி பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் (LSRW Skills- Learning, Speaking, Reading and Writing Skills) திறன்களை மேம்படுத்துதல்.
- நன்னெறி கதைகள் மூலம் மாணவர்களிடையே நல்லொழுக்கங்களை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2. கலை கலாச்சார பிரிவு

பள்ளிகளில் சுற்றுச்சூழல் சார்ந்த கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, பட்டி மன்றம், கவிதைப் போட்டி, நாடகம், பாட்டு, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றை நடத்தி மாணவர்களிடையே கல்வி இணை சார் செயல்பாடுகள் மற்றும் பயனுள்ள பொழுதுபோக்கு செயல்பாடுகளை வளர்த்தல் வேண்டும்.

- மரக்கன்று நடுதல், மூலிகைத் தோட்டம் அமைத்தல், உரம் புழுக்கள் உருவாக்குதல், தோட்டங்களை உருவாக்க மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்.

Scanned by CamScanner

- இயற்கை உரங்களை வழங்குதல். தோட்டம் மற்றும் மரக்கன்றுகளுக்கு வேலி அமைத்தல்.
- சொட்டு நீர் பாசன முறையை உருவாக்குதல்.
- மழைநீர் சேகரிப்புத் திட்டம் அமைத்தல், தூய்மையான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் தேவையான உபகரணங்கள் (RO) வாங்குதல்.
- பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்யத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்.
- பள்ளி வகுப்பறைகளுக்குத் தேவைான குப்பைக் கூடைகள், ஜன்னல்களுக்குத் தேவைான கொசுவலைகள் அமைத்தல்.
- காகிதக் குப்பைகளைச் சேகரித்து மறுசுழற்சி முறையில் புதிய பொருட்களை உருவாக்க உதவுதல். அதற்கான தொழில்நுட்பத்தை விளக்குதல்.
- சூரிய மின் சக்தியை பயன்படுத்தி மின்சாரம் தயாரித்தல்.
- பள்ளிகளில் மாணவர்கள் கைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கும், கழிவறைகள் மற்றும் குடிநீர்த் தொட்டிகளையும் தூய்மையாக பராமரிப்பதற்குத் தேவைான உபகரணங்கள் மற்றும் பொருட்கள்.
- மண்வளம், குடிநீரின் தன்மையைக் கண்டறிய வழிவகை ஏற்படுத்துதல்.

3. விழிப்புணர்வு பிரச்சார பிரிவு

பேரணிகள் நடத்துதல், அரசின் திட்டங்களை எடுத்துரைத்தல், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்றவற்றை நடத்துதல் வேண்டும்.

- வீடு, பள்ளி மற்றும் சுற்றுப்புறங்களில் (Plastic) நெகிழிப் பொருட்களை பயன்படுத்துவதைத் தவிர்த்தலுக்கான விழிப்புணர்வு பேரணி நடத்துதல்.
- உயிரி பன்முகத்தன்மை (Bio-diversity), சுகாதாரத்தின் மீது ஆர்வம், காலநிலை மற்றும் உள்ளூர் சூழலியல், உடல் ஆரோக்கியம், ஊட்டச்சத்து, துப்புரவு மற்றும் சுகாதாராம் ஆகியவற்றைக் குறித்த விழிப்புணர்வு பலகைகளை அமைத்தல்.
- புவி தினம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாதம் கொண்டாடச் செய்தல்.
- இயற்கை விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு பலகைகளை ஏற்படுத்துதல்.
- பள்ளி அருகாமையில் உள்ள பூங்கா, பொது விளையாட்டுத் திடல் போன்ற இடங்களுள் ஏதேனும் ஒரு இடத்தினைத் தெரிவு செய்து சுற்றுப்புறச் சூழலை பாராமரித்தல் பணி மேற்கொள்ளுதல்.

Scanned by CamScanner

மேற்காண் செயல்பாடுகளுக்கு பெற்றோர், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் / ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளித்திட பயன்படுத்திக் கொள்ளலாம்.

பள்ளிகளில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்:

பள்ளிகளில் தொகை பெறப்பட்டமை மற்றும் செலவு செய்யப்பட்டமை ரொக்கப் பதிவேட்டில் (Cash Book) பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதக் கடைசியிலும் ரொக்கப்பதிவேட்டில் Abstract – இல் கையொப்பமிட வேண்டும். பொருள்களின் விவரங்களை இருப்புப் பதிவேட்டில் (Stock Register) பதிவு செய்தல் வேண்டும். இருப்புப் பதிவேட்டு பக்க எண் பற்று சீட்டில் பதியப்பட வேண்டும். ஒவ்வொரு பதிவிலும் தலைமை ஆசிரியர் கையொப்பமிட வேண்டும். செயல்பாடுகளுக்கான பதிவேடு பராமரித்தல் வேண்டும். பயன்பாட்டுச் சான்றிதழ்களை பள்ளித் தலைமையாசிரியர்கள் மாவட்ட திட்ட அலுவலகத்தில் மார்ச் (31.03.2020) மாதத்திற்குள் ஒப்படைக்கப்பட வேண்டும். இது சார்ந்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பறிக்கை, Video பதிவுகள், Testimonials ஆகியவற்றை Shagun Portal-இல் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

மாவட்ட திட்ட ஒங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்–9.

பெறுநர்:– அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்

நகல் :

1. மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்(தொடக்கக்கல்வி), ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர்கள், அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
4. அலுவலக கோப்பிற்கு.

Scanned by CamScanner